பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 22 சனிக்கிழமை 04.04.2021 கதிர் 17

## நாட்டில் பலத்த பாதுகாப்புகளுடன் நடைபெற்ற 'ஈஸ்டர்' தின வழிபாடு



இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பை நினைவு கூரும் உயிர்த்த ஞாயிறு தினத் திருப்பலி வழிபாடுகள் கிறிஸ்தவ தேவாலயங்களில் இன்று நடைபெற்றன.

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடனேயே திருப்பலி வழிபாடுகள் நடைபெற்றன.

2019 ஆம் ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்களையும், நட்சத்திரக் ஹோட்டல்களையும் இலக்கு வைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன

☞ 2

## யாழ் பாடசாலைகள் நாளையும் இயங்கா

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஏப்.04

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகள் நாளைய தினமும் ஆரம்பிக்கப்பட மாட்டாது என வடக்கு மாகாண கல்வி அமைச்சின்

☞ 2

## இன்னும் நீதி கிடைக்கவில்லை

### சஜித் அணி கவலை



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை மையப்படுத்தி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் நீதி நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்கவில்லை. எனவே, தாக்குதலின்

☞ 2

## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

# குற்றவாளியான மைத்திரிக்கு எதிராக சட்டத்தை உடனே செயற்படுத்துங்கள்!

### அரசிடம் பேராயர் வேண்டுகோள்



**உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் குற்றவாளி எனக் கூறப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

**- இவ்வாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை.**

☞ 2

## பட்டப்பகலில் யுவதி வெட்டிப் படுகொலை

இளம் யுவதி ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

கலேவெல, பட்டிவெல சந்தியில் நேற்றுப் பிற்பகல் 19 வயது யுவதியே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குடும்பப் பிரச்சினை காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கொலையாளியான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

☞ 2

## புதையல் தோண்டிய இரு பிக்குகள் உட்பட 11 பேர் மாட்டினார்கள்

(வவுனியா நிருபர்)

வவுனியா, தாலிக்குளம் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 11 பேரைப் பூவரசங்குளம் பொலிஸார் இன்று கைது செய்தனர்.

தாலிக்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வளவில் புதையல் தோண்டப்படுகின்றது எனப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து இன்று அதிகாலை குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார்

☞ 2

## இந்திய மீனவர்கள் எவரையும் இலங்கைக்குள் அனுமதியாதீர்

### மீறினால் பெரும் போராட்டம் வெடிக்கும்; மீனவ சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை

இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன்பிடிக்க அரசு அனுமதித்தால் அதை எதிர்த்து மாபெரும் போராட்டங்களை முன்னெடுப்போம் என்று மீனவ சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

☞ 2




## யாழில் இளைஞர் மீது தாக்குதல்; மீட்க வந்தவருக்குக் கத்திக் குத்து!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். கல்லுண்டாய் பகுதியில் இளைஞர் ஒருவரை இனந்தெரியாத கும்பல் ஒன்று வழிமறித்துத் தாக்கியுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான இளைஞரை மீட்கவந்த நண்பன் மீதும் கத்திக்குத்துத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை

☞ 2



## புத்தூர்க் கொலையின் சூத்திரதாரிகள் இருவர் தனுஷ்கோடியில் இன்று கைது





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஏப்.04

இந்தியாவின் தமிழகத்திற்குள் சட்டவிரோதமாக நுழைந்த நிலையில் இன்று காலை தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த இருவரும் யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் இடம்பெற்ற கொலையுடன் தொடர்புபட்டவர்கள் எனச் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய - இலங்கை சர்வதேசக் கடல் எல்லை ஊடாக தமிழகத்திற்குள் இலங்கையைச் சேர்ந்த இருவர் சட்டவிரோதமாக நுழைந்தனர் எனத் தெரிவித்து இன்று காலை இரு இளைஞர்கள் இந்தியாவின் இராமேஸ்வரம் சுங்கத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

☞ 2

## குடத்தனை வீட்டில் தனித்திருந்த இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ். வடமராட்சி கிழக்கு, குடத்தனைப் பகுதியில் இன்று காலை வீட்டில் தனியே தங்கியிருந்த இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடத்தனை, தரவைப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய முகுந்தன் சுலக்சன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் இளைஞன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரவு இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

யாழ். நகர் பகுதியில் பாதுகாப்பு உத்தியோகஸ்தராகக் கடமையாற்றும் இளைஞர் கடமை முடித்து கல்லுண்டாய் வீதி வழியாக வீடு திரும்பியுள்ளார்.

அவ்வேளை குறித்த இளைஞரை வீதியில் வழிமறித்த கும்பல் ஒன்று அவர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளது. காயமடைந்த இளைஞரை அவ்விடத்தில் விட்டு விட்டு அக்கும்பல் சென்றுள்ளது.

காயத்துக்கு இலக்கான இளைஞர் தொலைபேசி ஊடாக அராலியில் உள்ள தனது நண்பனுக்குத் தகவல் வழங்கியுள்ளார். அதனை அடுத்து தாக்குதலுக்கு இலக்கான இளைஞரை மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல அவரது நண்பன் மோட்டார் சைக்கிளில் சம்பவ இடத்துக்குச் சென்றபோது, அராலி பலத்தடியில் வைத்து இளைஞரைத் தாக்கிய கும்பல் மறித்து கத்திக் குத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

அதையடுத்து அந்தக் கும்பல் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்ற பின்னர் இரு இளைஞர்களும் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## பட்டப்பகலில் யுவதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவம் தொடர்பில் கலேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாட்டில் பலத்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதனால் கடந்த வியாழக்கிழமை இரவு முதல் பொலிஸாரும் முப்படையினரும் இணைந்து கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட பாதுகாப்பை வழங்கி வந்தனர்.

12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸாரும், படையினரும் இவ்வாறு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத் தப்பட்டனர்.

## புதையல் தோண்டிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலத்தை தோண்டிக்கொண்டிருந்த இரு பிக்குமார் உட்பட 11 பேரைக் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து நிலத்தைத் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களை மீட்டதுடன், 2 கார்கள் மற்றும் ஓட்டோவையும் பறிமுதல் செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (100)

## இந்திய மீனவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அனைத்து இலங்கை பொது மீனவ சம்மேளனத்தின் தலைவர் ரத்ன கமகே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைக ளில் ஈடுபடுவதற்கு அனுமதிப் பத்திர நடைமுறையை அமுல்படுத்த அரசு திட்டமிட்டு வருகின்றது என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதை நாம் ஒருபோதும் ஏற்றுகொள்ளமாட்டோம். இந்திய மீனவர்களை இலங்கைக் கடற் பரப்புக்குள் மீன்பிடிக்க அனுமதிக்கும் பட்சத்தில், அதை எதிர்த்துப் பாரிய போராட்டங்களை முன்னெடுப்போம். இலங்கைக் கடற்பரப்பு இலங்கை மீனவர்களுக்கே சொந்தமானது. இந்தக் கடற்பரப்பில் வேறு நாட்டவர்கள் மீன்பிடிக்க அனுமதி இல்லை – என்றார்.

## குற்றவாளியான மைத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்துடன், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை விரைவில் செயற்படுத்த வேண்டும் என்றும் பேராயர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தேவாலயங்களிலும் இன்று உயிர்த்த ஞாயிறு விசேட ஆராதனைகள் இடம்பெற்றன. இந்தநிலையில், பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் கொழும்பு - கொட்டாஞ்சேனை சென். லூசியா தேவாலயத்தில் சிறப்பு ஆராதனை இடம்பெற்றது.

இங்கு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த பேராயர்,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைவில் செயல்படுத்துமாறு நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்தத் தற்கொலை தாக்குதல்களில் உயிரிழந்தவர்களை இன்று நினைவு கூருகின்றோம்.

குறித்த தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட வேண்டும்.

உண்மையில் நாங்கள் வெட்கப்படுகிறோம். முன்னாள் ஜனாதிபதி எதிர் வரும் தேர்தலில் களமிறங்கப் போவதாக ஒரு வதந்தி உள்ளது. கடமைகளை மறந்து வெளிநாடு சென்ற ஒரு ஜனாதிபதி எப்படி மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியும்? அவர் இன்னமும் எப்படி ஒரு கட்சித் தலைவராக இருக்க முடியும்?

அதேபோல, ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றவாளியாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளார். எனவே அவருக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு மேலும் தாமதிக்க வேண்டிய அவசியம் இல்லை.

அத்துடன், இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய அமைச்சர்கள் மற்றும் ஏனைய சிலர் தற்போது சுதந்திரமாக நடமாடுகின்றனர். இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

எனவே, நடுநிலையாக தாக்குதலுடன் தொடர்புடைய அனைவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

### தாக்குதல் நடத்தத் திட்டமா?

# வெடி மருந்துகளுடன் 4 பேர் சிக்கினார்கள்!

அனுமதிப் பத்திரமின்றி வெடி மருந்துகளைக் கொண்டு சென்ற நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவுல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவுல – எலஹெர வீதியில் நேற்று சந்தேகத்துக்கிடமான ஓட்டோவைச் சோதனைக்குட்படுத்தியபோதே வெடிமருந்துகளுடன் நால்வர் கைதுசெய் யப்பட்டுள்ளனர். அவிசாவளை பகுதியைச் சேர்ந்த நான்கு சந்தேகநபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களிடமிருந்து 3 கிலோ 230 கிராம் அமோனியா, 135 கிராம் வோடர் ஜெல், 20 கிராம் வெடி மருந்து, 14 டெட்டனேட்டர்கள் உட்படப் பல்வேறு வெடி மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவுல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## புத்தூர்க் கொலையின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர்களிடம் கியூ பிரிவு மற்றும் மத்திய பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வந்த நிலையில் இருவரும் முதலில் மன்னாரைச் சேர்ந்தவர்கள் எனவும் தொழில் தேடி வந்தவர்கள் எனவும் கூறியுள்ளனர். இருப்பினும் தனுஷ்கோடி அரிச்சல் முனை சுங்கத்துறையினர் சந்தேகம் அடைந்தனர்.

இதனால்இருவரும்கியூபிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போது யாழ்பாணத்தை சேர்ந்த இந்த இரு இளைஞர்கள் கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி யாழ்ப்பாணம் வாதரவத்தை வீரவாணி பகுதியில் கொரோனா காரணமாக தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சந்திரகோபால் என்பவரைக் கொலை செய்த விடயத்தில் தொடர்புடையவர்களாக இருக்கலாம் எனவும், யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிரமாகத் தேடிவரும் நிலையில் இந்தியாவுக்கு தப்பி வந்துள்ளனர் எனவும் தெரிய வந்ததாகக் கூறப்படுகின்றது..

கைது செய்யப்பட்டவர்கள் புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த விஜயராசா நதீஸ் மற்றும் யோகேந்திரன் பிரதாபன் எனத் தமிழகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் இந்த விடயம் தொடர்பில் இலங்கை பொலிஸார் தரப்புக் கருத்து எதுவும் இதுவரை வெளிவரவில்லை.

## இன்னும் நீதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பின்பலம் கட் டாயம் கண்டறியப்பட வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி வலியுறுத்தினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதலில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்து, உடல் அவயங்களை இழந்தனர். இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு கைதுகள் இடம்பெற்றிருந்தாலும் நல்லாட்சியின்போது நீதி கிடைக்கவில்லை. அரசுக்குள் இருந்து கொண்டு நீதிக்காகப் போராடினோம். அப்போராட்டம் பலனளிக்கவில்லை.

மேற்படி தாக்குதலை வைத்து பிரசாரம் செய்துதான் தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனால். இன்னும் நீதி கிடைக்கவில்லை. தாக்குதலின் பிர தான சூத்திரதாரிகள் யார், திட்டமிட்ட குழுவினர் யார், நிதி உதவி வழங்கியது யார் என்பன உட்பட அனைத்து விடயங்களும் கண்டறியப் படவேண்டும். அத்திசையை நோக்கி அரசு பயணிப்பதாகத் தெரியவில்லை. அதேவேளை, மதத்தை அடிப்படையாகக்கொண்டு அழுத்தங்களைப் பிரயோகிக்கும் தரப்புகளுடன் கூட்டணி வைக்கப்படக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரிடம் எடுத்துரைத்துள்ளோம். அவரும் அதை ஏற்றுக்கொண்டுள்ளார் – என்றார்.

## யாழ் பாடசாலைகள் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பகுதியில் தொடர்ந்தும் கொரோனாத் தாக்கம் காணப்படுவதனால் அந்த வலயப் பாடசாலைகளிற்கு ஏற்கனவே மாவட்ட அரச அதிபரின் அனுமதியின் பெயரில் மூடப்பட்டது.

இவ்வாறு மூடப்பட்ட பிரதேசங்களின் கொரோனாத் தாக்கம் பூரணமாக கட்டுப்படாத காரணத்தால் தொடர்ந்தும மூடுவதே உசிதமானது என்ற நிலையில் யாழ்ப்பாணம் வலயப் பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் 9ஆம திகதி வரை மூடப்படுகின்றது என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000
இணையம் - onlinekathir.com


## சாத்தான் ஓதும் வேதம்

இன்று உயிர்ப்புப் பெருவிழா. இதனையொட்டி நாட்டின் அதி உத்தமர் வெளியிட்டுள்ள செய்தியை நோக்கும்போது இரண்டு பழமொழிகள் நினைவுக்கு வருகின்றன.

ஒன்று –'படிப்பது தேவாரம்; இடிப்பது சிவன்கோயில்.'

மற்றது – 'ஊருக்கடி உபதேசம் உனக்கில்லையடி.'

*"இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்கள் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்போது தீவிரவாதத் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்தனர். இந்தத் துன்பியல் சம்பவத்தைப் புரிந்த குற்றவாளிகளான தனிநபர்களுக்கோ குழுக்களுக்கோ சட்டத்திலிருந்து தப்பிக்க இடமளிக்கப்பட மாட்டாது.*

*"உயிர்த்த ஞாயிறின் – உயிர்ப்பு விழாவின் – பொருள் பாவத்திலிருந்து இரட்சிப்பு பெறுவதாகும். பாவத்திலிருந்து விடுபட்டு, செய்த பாவத்திற்காக மனம் வருந்தி, புதியதோர் வாழ்க்கையை ஆரம்பிப்பதையும் இது குறித்து நிற்கின்றது."*

– இப்படித் தெரிவித்திருக்கின்றார் நாட்டின் அதிபர் அதி உத்தம ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ.

இந்த நற்செய்தி, பிறருக்குத்தானா, தமக்கு இல்லையா என்று அவரிடம் கேட்க விரும்புகிறோம்.

அதுதான் 'ஊருக்கடி உபதேசம்; உனக்கில்லையடி!' என்ற மூத்தோர் உரையை நினைவூட்டினோம்.

ஜனாதிபதி கூறுவது போல பாவத்திலிருந்து இரட்சிப்புப் பெறுவதுதான் இன்றைய உயிர்த்த ஞாயிறு நமக்குணர்த்தும் செய்தி. அது உண்மையே.

ஆனால், அதனைக் கூறிக்கொண்டு பாவத்தை மூடி மறைக்கும் பாவத்தை இழைப்பது பெரும்பாவம் ஆகும்.

ஆக, இலங்கைத் தீவில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கிறிஸ்தவர்களை இலக்கு வைத்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் மட்டும் இடம்பெறவில்லை.

அதற்கு முன்னர், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதிலும் விட கொடூரமான – குரூரமான – மிக மோசமான – மிருகத்தனமான – தாக்குதல் தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது.

அந்தப் பாவத்துக்கு யாரும் இரட்சிப்புப் பெறவுமில்லை. அந்தப் பாவச் சுமை இறக்கி வைக்கப்படவுமில்லை. இதே ஜனாதிபதியின் ஆட்சிப்பீடத்தினால் அது மூடி மறைக்கப்பட்டிருக்கின்றது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களினால் உறவுகளை இழந்த, உடல் பாதிப்புக்குள்ளான மக்கள் படும் அவலத்தைப் போல, யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழ் மக்கள் மீது ஏவி விடப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரம் மக்களின் அவலம் இன்னும் பல மடங்காகத் தொடர்கின்றது. வலிந்து காணாமலாக்கப்பட்ட பல்லாயிரம் மக்களின் வாழ்வியல் நெருக்கடிகள் நீடிக்கின்றன. சிறைகளில் வாழும் அரசியல் கைதிகளின் அவலம் தீர்க்கப்படவில்லை. ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தேசக் காணிகள் இன்னும் முற்றாக விடுவிக்கப்படவில்லை. இழப்பீடுகள் வழங்கப்படவில்லை. மீள நிகழாமை உறுதிப்படுத்தப்படவில்லை.

யுத்த காலத்தில் தமிழர் மீதும், தமிழர் தேசம் மீது – தாயகம் மீது – கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரங்களிற்கும் குற்றங்களுக்கும் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. உண்மைகள் கண்டுபிடிக்கப்படவில்லை. நீதி நிலைநாட்டப்படவில்லை. பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அவற்றை முன்னெடுப்பதற்கான சகல முயற்சிகளையும் இலங்கை ஆட்சிப் பீடங்கள் பன்னிரண்டு ஆண்டுகளாக முட்டுக்கட்டை போட்டு முறியடித்த பின்னணியிலேயே, அந்தப் பொறுப்புக்கூறல் விவகாரத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சியை சர்வதேசம் இப்போது தன் கைகளில் எடுத்திருக்கின்றது.

தமிழர்களுக்கு எதிராகக் கொத்துக் கொத்தாகக் குற்றங்களை கொடூரமாக இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்த விடாது, தடைபோட்டு மறுத்து, யுத்தக் குற்றவாளிகளை காபந்து பண்ணிக் கொண்டு –

மறுபுறத்தில், ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் 'குற்றவாளிகளை சட்டத்திலிருந்து தப்பிக்க ஒருபோதும் இடமளியேன்' என்று ஜனாதிபதி கூறுகின்றமை மிக மிக வேடிக்கையானது.

அதனைத்தான், 'படிப்பது தேவாரம், இடிப்பது சிவன் கோவில்' என்றோம். அதை இன்னும் கொஞ்சம் விளக்கமாக – விவரமாக – கூறுவதானால் இப்படி 'குற்றவாளிகளை சட்டத்திலிருந்து தப்பிக்க ஒரு போதும் இடமளியோம்' என்று இந்த ஆட்சிப் பீடம் குறிப்பிடுவது 'சாத்தான் வேதம் ஓதுவதற்கு' ஒப்பானதாகும்.

இது நீதியின் காதில் பூச்சுற்றும் நட்டாமுட்டித்தனம்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கும், அழிவுகளுக்கும், நாசங்களுக்கும் ஏதோ ஒரு வழியில் என்றோ ஒரு நாள் நீதி கிட்டும். நியாயம் கிடைக்கும். உண்மை நிலைநிறுத்தப்படும். பொறுப்புக் கூறல் பொறிமுறை செயற்படுத்தப்படும்.

அப்போதுதான் இந்தப் பாவங்களிலிருந்து உரியவர்களுக்கு மீட்சி கிடைக்கும். இரட்சிப்பும் கிட்டும்.

# ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் சட்டத்தில் இருந்து தப்பிக்கவே முடியாது



### கோட்டா சூளுரைப்பு

கொழும்பு, ஏப். 04

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய நபர்களுக்கோ அல்லது குழுக்களுக்கோ சட்டத்தில் இருந்து தப்பிக்க இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், இதுபோன்ற பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெறாத வகையில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் உறுதியுடன் செயற்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இயேசு பிரான் உயிர்த்தெழுந்த நாளை கிறிஸ்தவர்கள் உயிர்த்த ஞாயிறு சிறப்பு நாளாக அனுஷ்டித்து வருகின்றனர்.

இந்த நிலையில், இன்று உலகளாவிய ரீதியில் உயிர்த்த ஞாயிறு தினம் அனுஷ்டிக்கப்படும் நிலையில், உலக நாடுகள் எதிர்நோக்கியுள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுகிட்ட பிரார்த்திக்கிறார் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 2019 ஆண்டு இதேபோன்ற உயிர்த்த ஞாயிறு தினத்திலேயே, நாட்டில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்கள் சிலவற்றில் பயங்கரவாத குழுக்களால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கிடைக்கும் வரையான கிறிஸ்தவ மக்களின் பொறுமை அளப்பரியதே

### பிரதமர் மஹிந்த பெருமிதம்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி கிடைக்கும் வரையான கிறிஸ்தவ மக்களின் பொறுமை அளப்பரியது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று சனிக்கிழமை தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்று ஈராண்டுகள் ஆகின்ற நிலையில் அது தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உலகளாவிய ரீதியில் உள்ள கிறிஸ்தவ பக்தர்களுடன் இணைந்து இலங்கை கிறிஸ்தவ மக்கள் இன்று உயிர்த்த ஞாயிறு தினத்தை கொண்டாடவுள்ளனர்.

மீட்பின் மகிழ்ச்சியைக் கொண்டாடும் நாளான இந்நாளில், இயேசு கிறிஸ்து, மரணத்தை தோற்கடித்து உயிர்த்தெழுந்தமையை இலங்கை வாழ் கிறிஸ்தவர்கள் அனைவரும் கொண்டாடுகின்றனர்.

இத்தால் ஈராண்டுகளுக்கு முன்னர் 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் சிறு குழந்தைகள் உட்பட 250 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்தமை நாம் அனைவரும் அறிந்ததே.

அந்தக் கொடிய தாக்குதலை அன்று போன்றே இன்றும் நாம் வன்மையாக கண்டிப்பதுடன் தாக்குதலில் உயிரிழந்த கிறிஸ்தவ மக்களின் குடும்பத்தினர் உள்ளிட்ட ஒட்டுமொத்த கிறிஸ்தவ சமூகத்துக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதலுக்குக் காரணமானவர்களை நீதியின் முன்னிறுத்துவதற்கு ஓர் அரசாங்கம் என்ற ரீதியில் நாம் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் என்பதையும் நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

கிறிஸ்தவ சமூகத்தினர் எதிர்பார்ப்பது போன்று, தாக்குதலுக்கு காரணமானவர்களை நீதியின் முன்னிறுத்தும் வரை விசாரணைகள் தடையின்றித் தொடரும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி கிடைக்கும் வரையான கிறிஸ்தவ மக்களின் பொறுமை அளப்பரியது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

சமூகத்தில் முகங்கொடுக்க நேரிடும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இரக்கம், சகவாழ்வு மற்றும் பரஸ்பர அன்புடன் கிறிஸ்தவ மக்கள் அனைவரும் வாழ வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும்.

இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்கள் அனைவருக்கும் உயிர்த்த ஞாயிறு தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என பிரதமர் மேலும் தெரிவித்தார்.

# சீன கொரோனாத் தடுப்பூசிக்கு எதிராக இலங்கை மருத்துவசங்கம் போர்க்கொடி

### சுகாதார அமைச்சருக்குக் கடிதம்

தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் அனுமதியின்றி நாட்டில் சினோபோம் தடுப்பூசி வழங்கப்படக்கூடாது என இலங்கை மருத்துவ சபை சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை மருத்துவ சபை சுகாதார அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சினோபோம் தடுப்பூசியின் பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் நோயெதிர்ப்புத் திறன் குறித்து தீர்மானிக்க போதுமான தரவு தேவைப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தடுப்பூசிகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் மீளாய்வு செய்ததன் பின்னரே நாட்டில் மக்கள் பாவனைக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

மேலும் நாட்டில் பொது மக்களுக்கு சினோபோம் தடுப்பூசி வழங்குவதற்கு முன்னர் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனைக்கமைய தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் அனுமதியுடன் மாத்திரமே நாட்டில் சினோபோம் தடுப்பூசி மக்கள் பயன்பாட்டுக்கு வழங்கப்பட வேண்டும் என இலங்கை மருத்துவ சபை சுகாதார அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

SLMC
Sri Lanka Medical Council

இலங்கை மருத்துவ சபையின் தலைவர் வைத்தியர் பத்மா குணரட்ன கையெழுத்திட்டுள்ள மேற்படி கடிதம் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி உட்பட இராஜாங்க அமைச்சர்களான சன்ன ஜயசுமன, சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டீஸ்கரில் நக்சலைட்டுகள் தாக்கு; 22 இராணுவத்தினர் உயிரிழப்பு!

சட்டீஸ்கர் மாநிலத்தில் நக்சல்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 22 ராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர். சட்டீஸ்கர் மாநிலத்தில் பல மாவட்டங்களில் நக்சலைட்கள் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. இவர்களை ஒடுக்க சிறப்பு அதிரடிப்படைகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இவர்கள் மீது நக்சலைட்டுகள் அடிக்கடி திடீர் தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர். கடந்த மார்ச் 23 ஆம் திகதி நாராயண்பூர் மாவட்டத்தில் அவர்கள் நடத்திய தாக்குதலில் 5 இராணுவ வீரர்கள் மரணமடைந்தனர். அந்த அதிர்ச்சி நீங்குவதற்குள் நேற்று நக்சல்கள் நடத்திய தாக்குதலில் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இது குறித்து சட்டீஸ்கர் மாநில டி.ஜி.பி. அஸ்வதி கூறுகையில், “பீஜப்பூர் மாவட்ட எல்லையில் உள்ள டர்ரம் வனப்பகுதியில் நக்சலைட்களை தேடும் பணியில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டனர். அப்போது, அங்கு பதுங்கிருந்த நக்சல்கள் திடீரென நடத்திய துப்பாக்கிச் சூட்டில், சில வீரர்களை இழந்திருக்கிறோம். சில வீரர்கள் காயமடைந்துள்ளனர். அவர்கள் மீட்கப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தாக்குதல் நடத்திய நக்சலைட்டுகள் தப்பி விட்டனர். அவர்களைத் தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது” - என்று தெரிவித்தார்.

இந்த நிலையில், சட்டீஸ்கர் மாநிலத்தில் நக்சல்கள் நடத்திய தாக்குதலில் 7 சி.ஆர்.பி.எப். வீரர்கள் உட்பட 21 ஜவான்கள் காணவில்லை என அம்மாநில காவல் துறைத் தரப்பில் இன்று காலை தெரிவிக்கப்பட்டது. இதனிடையே இந்தத் தாக்குதலில் 15 சி.ஆர்.பி.எப். வீரர்கள் உட்பட 30 ஜவான்கள் காயம் அடைந்துள்ளனர் என்றும் அவர்களில் 23 பேர் பிஜப்பூர் மருத்துவமனையிலும் 7 பேர் ராய்ப்பூர் மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தப்பட்ட



தேடுதல் நடவடிக்கையில் சுக்மாவில் என்கவுண்டர் நடந்த இடத்தில் 22 இராணுவ வீரர்களது உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மார்க்சிஸ்ட் – பா.ஜ.க. ரகசிய உடன்பாடு கேரளாவில் ராகுல் காந்தி குற்றச்சாட்டு

‘கேரளாவில் மார்க்சிஸ்ட், பா.ஜ.க. இரண்டுக்குமிடையே ரகசிய உடன்பாடு ஏற்பட்டுள்ளது’ என்று ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார். காங்கிரஸ் பிரமுகர் ராகுல் காந்தி நேற்று கோழிக்கோடு மாவட்டத்தில் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார்.

அங்குள்ள கொயிலாஞ்சியில் நடந்த கூட்டத்தில் அவர் பேசியபோது, கேரளாவில் மார்க்சிஸ்ட், பா.ஜ.க. இடையே ரகசிய உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காங்கிரஸ் இல்லாத இந்தியாவை உருவாக்குவோம் என்று மோடி அடிக்கடி கூறி வருகிறார். அவர் எப்போதாவது மார்க்சிஸ்ட் இல்லாத பாரதம் என்று



கூறியிருக்கிறாரா? காங்கிரஸை பா.ஜ.க. அழிக்க முயற்சிப்பதற்கு இதுதான் காரணமா? தேவையில்லாத அரசியல் குற்றச்சாட்டுகளைக் கூறுவதற்குப் பதிலாக வளர்ச் சித் திட்டங்களைப் பேசவே காங்கிரஸ் விரும்புகிறது என்று குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாக வசிப்பதற்கான வாய்ப்பை பெற கீழ் காணும் தகமைகளுடன் விண்ணப்பிக்கவும்

MIGRATE TO AUSTRALIA

Degree Holders:
Engineers
IT Professionals
Agricultural Professionals
Architects
Quantity Surveyors
Land Surveyors
Social Workers
Nurses

Diploma Holders: (HNDE, NDT, NDES)
Civil Engineering Associates
Mechanical Engineering Associates
Telecommunications Engineering Associates
Electrical Engineering Associates
Maintenance Planners

NVQ IV Holders: (CGTTI, AETI, NAITA, ATI)
Motor Mechanics
A/C Mechanics
Electricians
Auto Electricians
Fitters
Welders
Machinists

Requirements:
* Age below 45
* Qualifications (Degree / Diploma / Certificate – NVQ III & IV)
* Work experience in the relevant field
* IELTS (6 in each) or PTE (50 in each)

CALL FOR FREE CONSULTATION:
- Partner Migration Visa
- Parents Visa
- Business Visa
- Visitors Visa

தொடர்புகளுக்கு:-
HOTLINE: 0766228891
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

## திருப்பதி கோயில் ஆர்ஜித சேவையில் மீண்டும் பக்தர்களுக்கு அனுமதி ரத்து

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நடைபெறும் ஆர்ஜித சேவையில் பக்தர்கள் பங்கேற்க மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது. திருப்பதி ஏழுமலையான் கோயிலில் வருகிற 14 ஆம் திகதி புதுவருடப்பிறப்பு முதல் சுப்ரபாதம், அர்ச்சனை, தோள் மாலை உள்ளிட்ட ஆர்ஜித சேவைகளுக்கு வழமை போன்று பற்றுச்சீட்டு வழங்கி பக்தர்களை அனுமதிக்க அறங்காவலர் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இதில் பங்கேற்கும் பக்தர்கள் கொரோனாத் தொற்று இல்லை என்ற பரிசோதனைச் சான்றிதழுடன் தரிசனத்திற்கு வர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், நாடு முழுவதும் கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதால் பக்தர்களின் நலனைக் கருத்தில்



கொண்டு வருடப்பிறப்பு முதல் பக்தர்களை ஆர்ஜித சேவையில் அனுமதிக்கும் முடிவை தற்காலிகமாக நிறுத்தி வைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று குறைந்த பிறகு மீண்டும் பக்தர்களை அனுமதிப்பது குறித்து ஆலோசிக்கப்படும் என்று தேவஸ்தான அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அனிதாவின் போலி வீடியோ டுவிட்டரில்; அதனை வெளியிட்ட அமைச்சர் மீது புகார்



நீட் தேர்வின் முடிவால் 2017 ஆம் ஆண்டு தற்கொலை செய்துகொண்ட அனிதா பேசுவது போல் சித்திரித்து வீடியோ வெளியிட்ட அமைச்சர் பாண்டியராஜன் மீது காவல்துறையில் மோசடிப் புகார் அளிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் பாண்டியராஜன் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி அனிதாவின் சகோதரர் மணிரத்னம் இந்தப் புகாரை அளித்துள்ளார்.

இது குறித்த கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மாஃபா பாண்டியராஜன், ‘எனது டுவிட்டர் கணக்கில் வெளியான பதிவுக்கும் எனக்கும் எந்த தொடர்பும் கிடையாது. எனது டுவிட்டர் கணக்கில் எனக்குத் தெரியாமல் அனிதாவின் வீடியோ வெளியாகியுள்ளது’ என்று தெரி வித்துள்ளார்.

அமைச்சர் பாண்டியராஜனை தகுதி நீக்கம் செய்து கிரிமினல் நடவடிக்கை எடுக்க அனிதாவின் சகோதரர் மணிரத்னம் வலியுறுத்தியுள்ளார். காவல் துறையில் இது தொடர்பாக புகாரளிக்கப்பட்ட ஒரு மணி நேரத்தில் அனிதாவின் வீடியோ அமைச்சரின் டுவிட்டர் கணக்கிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியின் உடல் நிலையில் முன்னேற்றம்

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்துக்கு கடந்த 26 ஆம் திகதி லேசான நெஞ்சு வலி ஏற்பட்டதால் உடனடியாக டெல்லி இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்ற அவர் மேலதிக சிகிச்சைக்காக எய்ம்ஸ் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

எய்ம்சில் கடந்த மாதம் 30 ஆம் திகதி ஜனாதிபதிக்கு பைபாஸ் சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. தற்போது அவரது உடல் நிலை சீராக உள்ளது என்றும் மருத்துவர்கள் குழு அவரைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்றும் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் நேற்று சிறப்பு



அறைக்கு மாற்றப்பட்டார். தன்னை சந்தித்தவர்களோடு உரையாடிய ஜனாதிபதி, சத்திர சிகிச்சைக்குப் பின், தான் குணமடைந்து வருவதாகக் கூறியிருக்கிறார். அத்தோடு மருத்துவர்கள் மற்றும் தாதியர்களுக்கு தனது நன்றியறிதலையும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவர்கிவன் பிரமாண்ட கப்பல் மீட்பு வழமைக்கு திரும்பிய சூயஸ் கால்வாய்




உலகின் கடல்வழித்தடத்தின் முக்கிய பாதையான எகிப்தில் உள்ள சூயஸ் கால்வாயில், கடந்த மாதம் 23ஆம் திகதி 'எவர் கிவன்' என்ற பிரமாண்ட சரக்குக் கப்பல் குறுக்கே சிக்கியது தெரிந்ததே.

கால்வாயை கடந்து சென்றபோது பலத்த காற்றால் கப்பல் திசைமாறி இருபுறமும் தரை தட்டியது. அதனால் சூயஸ் கால்வாயில் போக்குவரத்து முற்றிலும் முடங்கியது.

ஏராளமான சரக்குக் கப்பல்கள் நடுவழியில் காத்து கிடந்தன. கால்வாய்க்கு குறுக்கே சிக்கிய 2.20 லட்சம் தொன் எடை கொண்ட எவர் கிவன் கப்பலை மீட்கும் பணியை தீவிரப்படுத்தினர்.

தரை தட்டிய பகுதியில் மணல்களை அகற்றியும், இழுவை கப்பல்கள் மூலமும் மீட்பு பணி நடந்தது. 6 நாள்களுக்கு பிறகு எவர் கிவன் கப்பல் மீட்கப்பட்டது. பலத்த காற்று, ராட்சத அலை மற்றும் மீட்பு பணி காரணமாக கப்பல் மிதக்க தொடங்கியது.

பின்னர் கப்பலை இழுவைக் கப்பலகள் இழுத்துச் சென்றன. இதையடுத்து சூயஸ் கால்வாயில் போக்குவரத்து மீண்டும் தொடங்கப்பட்டது. கால்வாயை கடக்க காத்துக் கொண்டிருந்த சரக்கு கப்பல்கள் ஒவ்வொன்றாகச் செல்ல அனுமதிக்கப்பட்டன.

இதையடுத்து கச்சா எண்ணை, மருந்துகள் உள்ளிட்ட சரக்குக் கப்பல்கள் புறப்பட்டுச் சென்றன.

இந்த நிலையில் சூயஸ் கால்வாயில் தடைப்பட்டு இருந்த போக்குவரத்து முழுமையாக சீரடைந்தது. இதுகுறித்து சூயஸ் கால்வாய் ஆணைய தலைவர் ஒசாமா ராபி கூறியதாவது:–

சூயஸ் கால்வாயை கடக்க காத்திருந்த அனைத்து கப்பல்களும் புறப்பட்டு சென்றன. எவர்கிவன் பிரமாண்ட கப்பலை மீண்டும் மிதக்க வைக்கும் பணியில் ஈடுபட்டவர்களில் 99 சதவீதம் பேர் எகிப்தியர்கள் என்றார்.

சூயஸ் கால்வாய் எகிப்துக்கு பொருளாதார ரீதியாக மிகவும் முக்கியமானது. அந்த நீர்வழிப் பாதை முடக்கப்பட்டதால் ஒவ்வொரு நாளும் 12 முதல் 1.5 கோடி அமெரிக்க டொலர் வரை வருவாய் இழப்பு ஏற்பட்டது, என்று ஆணையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு கிட்டத்தட்ட 19 ஆயிரம் கப்பல்கள் சூயஸ் கால்வாயை கடந்து சென்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# டுவிட்டர் நிறுவனத்துக்கு அபராதம் விதித்த ரஷ்யா




ரஷ்யாவில் கடந்த 2012ஆம் ஆண்டு சமூக வலைதளங்களில் சர்ச்சைக்குரிய உள்ளடக்கங்கள் இருக்குமாயின் சம்பந்தப்பட்ட சமூக வலைத்தளத்தை தடுப்புப் பட்டியலில் வைக்க அனுமதிக்கும் சட்டம் இயற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தது. அப்போது முதல் ரஷ்ய அரசு சமூக வலைத்தளங்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னியை கைது செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் பெரிய அளவில் போராட்டங்கள் நடைபெற்றன. உண்மைக்குப் புறம்பான செய்திகளை சமூக வலைத்தளங்களில் பரப்பியது இந்த போராட்டத்துக்கு காரணம் என சமூக வலைத்தளங்கள் மீது ரஷ்யா அரசு அதிகாரிகள் குற்றம் சாட்டினர்.

இந்நிலையில், போராட்டத்தில் பங்கேற்க சிறுவர்களுக்கு அழைப்பு விடுக்கும் விதமாக பதிவிடப்பட்ட பதிவுகளை நீக்கத் தவறியதாக கூறி டுவிட்டர் நிறுவனம் மீது ரஷ்ய அரசு வழக்கு தொடர்ந்தது. இது தொடர்பான வழக்கு விசாரணை மாஸ்கோ நீதிமன்றில் நடந்து வந்தது. நேற்று முன்தினம் நடந்த இறுதி விசாரணையின் போது டுவிட்டர் நிறுவனம் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இந்த வழக்கில் டுவிட்டர் நிறுவனத்துக்கு 1 லட்சத்து 17 ஆயிரம் அமெரிக்க டொலர் அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

ஏற்கனவே, கடந்த வாரம் ரஷ்யாவின் அரசு தகவல் தொடர்பு கண்காணிப்பு குழு, 30 நாள்களுக்குள் தடைசெய்யப்பட்ட உள்ளடக்கங்களை நீக்கத் தவறினால் டுவிட்டருக்கு நிரந்தரத் தடை விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுத்தது குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷில் மீண்டும் நாடு தழுவிய ஊரடங்கு

இந்தியாவின் அண்டை நாடான பங்களாதேஷில் கொரோனாத் தொற்று அதிகரித்ததால், கடந்த ஆண்டு நாடு தழுவிய ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. அதன்பின் படிப்படியாக தளர்வுகள் அளிக்கப்பட்டு ஊரடங்கு திரும்பப் பெறப்பட்டது.

இந்தியாவில் தற்போது கொரோனா வைரஸ் அதிகரித்து வரும் அதேநிலையில், வங்காளதேசத்திலும் கொரோனா தொற்று அதிகரித்துள்ளது. இன்றைய நிலைவரப்படி கடந்த 24 மணி நேரத்தில் அந்நாட்டில் 6,830 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 50 பேர் பலியாகியுள்ளனர்.

இதனால் முன்னெச்சரிக்கை காரணமாக நாளையதினம் 5ஆம் திகதியில் இருந்து ஒரு வாரத்திற்கு நாடு தழுவிய ஊரடங்கு அமல்படுத்தப்படும் என வங்காளதேச அரசு அறிவித்துள்ளது.

இதுவரை வங்காளதேசத்தில் 6 லட்சத்து 24 ஆயிரத்து 594 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 9 ஆயிரத்து 155 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் உயர் கல்வியைத் தொடர அநேகமான மாணவர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு

Courses available:

Diploma | Bachelor Degree | Master Degree

Bio Medical Sciences, Hospitality, Information Technology, Engineering and Nursing

கிடைக்கப்படும் நன்மைகள்:-

- படித்துக் கொண்டே ஒரு வாரத்தில் 20 மணி நேர வேலைக்கான அனுமதி உண்டு.
- பட்டபடிப்பை நிறைவு பெற்று 24 மாத வேலை செய்வதற்கான அனுமதி உண்டு.

இலங்கையில் கல்வி கற்ற பொறியியலாளர்களுக்கு ஆஸ்திரேலியா விசா!!!

Australian Skilled – Recognised Graduate Visa for Civil Machanical, Electrical, Electronics, Chemical Engineers (Graduated within the Last 2 years)

18 Months to work in any State and Cities in Australia.

தகைமைகள்:

- வயது எல்லை 31
- பொறியியலாளர் பட்ட படிப்பு
  BSc.Engg from University of Moratuwa, University of Peradeniya, University of Jaffna, University of Ruhuna
- ஆங்கிலம் - IELTS average 6

தொடர்புகளுக்கு:-

HOTLINE: 0766228891

Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

# அமெரிக்காவில் விருந்து நிகழ்வில் துப்பாக்கிச் சூடு; 3 பேர் உயிரிழப்பு!

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாநிலத்தில் வில்மிங்டன் நகரில் வீடு ஒன்றில் விருந்து நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த விருந்தில் 7 பேர் கலந்து கொண்டிருந்தனர். திடீரென அவர்களை நோக்கி மர்ம நபர்கள் சிலர் துப்பாக்கிச்சூடு நடத்தி உள்ளனர்.

இந்த சம்பவத்தில் விருந்தில் பங்கேற்ற 3 பேர் உயிரிழந்துள்ளனர். 4 பேர் காயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் பற்றி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். சந்தேக நபர்கள் அடையாளம் காணப்படுவார்கள் என தலைமை காவலர் டானி வில்லியம் கூறியுள்ளார்.

# போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலுக்கு மியன்மார் ராணுவத்துக்கு இந்தியா கண்டனம்

மியன்மார் நாட்டில் ஜனநாயக ஆட்சியை கடந்த பிப்ரவரி முதலாம் திகதி போராட்டக்காரர்கள் மீதான தாக்குதளுக்கு மியன்மார் இராணுவத்துக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

இராணுவம் கவிழ்த்துவிட்டு அதிகாரத்தை கைப்பற்றியது. இராணுவ ஆட்சிக்கு எதிராக பொதுமக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். போராட்டத்தை ஒடுக்க இராணுவம் துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட அடக்குமுறைகளை கையாண்டு வருகிறது.

500–க்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதனால் மியான்மர் ராணுவத்துக்கு ஐ.நா. சபை மற்றும் அமெரிக்கா, இங்கிலாந்து உள்பட சர்வதேச நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மியான்மரில் ராணுவத்தால் நடக்கும் வன்முறைக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து மத்திய வெளியுறவுதுறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறியதாவது:–

மியான்மர் நாட்டில் நடத்தப்படும் எந்தவொரு வன்முறைக்கும் இந்தியா கண்டனம் தெரிவித்து கொள்கிறது. அங்கு சட்டத்தின் ஆட்சி நிலை நிறுத்தப்பட்டு ஜனநாயகம் மீண்டும் தழைக்க வேண்டும். அங்கு கைது செய்யப்பட்டுள்ள அரசியல் தலைவர்கள் உள்ளிட்டவர்களை விடுவிக்க வேண்டும்.

மியான்மரில் தற்போது நிலவும் சூழலை முடிவுக்கு கொண்டு வருவதற்கு 10 தென்கிழக்கு ஆசிய நாடுகளை கொண்ட ஆசியான் அமைப்பின் நடவடிக்கைகள் உள்பட அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளது. இதில் சர்வதேச நாடுகளுடனும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுடனும் இந்தியா தொடர்பில் இருந்து வருகிறது –இவ்வாறு அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரநடுகை செயற்திட்டம் இன்று மட்டக்களப்பில் ஆரம்பம்







மரங்களை நடுவோம் இயற்கையைப் பாதுகாப்போம், மரங்களின் பாதுகாவலன் மரநடுகை செயற்திட்டமானது இன்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டது.

சாரணியத்தந்தை பேடன் பவளின் 164 ஆவது ஜனன தினத்தினை நினைவு கூறும் முகமாக இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடும் தேசிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அதின் ஒரு அங்கமான இருபத்தையாயிரம் மரக்கன்றுகளை நடும் செயற்திட்டத்தினை சக்தி, சிரச மற்றும் எம். ரீ.வீ. ஊடக அனுசரனையுடன், எஸ்லோன் லங்கா நிறுவனத்தின் பங்களிப்புடன் குறித்த மரநடுகை நிகழ்வானது 16 நாள் செயற்திட்டமாக நாடு பூராகவும் இடம்பெற்றுவரும் நிலையில் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதான வளாகத்தில் இன்று மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மரநடுகை நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட சாரண சங்கத்தின் தலைவருமாகிய கே.கருணாகரன் கலந்து கொண்டார்.

## மூன்று பிள்ளைகளின் தந்தை தற்கொலை

திருகோணமலை, ஏப். 04

திருகோணமலை - மஹதிவுல்வெவ பிரதேசத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையொருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடும்பத்தகராறு காரணமாக நஞ்சருந்திய நிலையில் வீதியோரத்தில் கிடந்த குறித்த நபரை மஹதிவுல்வெவ வைத்தியசாலைக்கு அழைத்து வந்த போதிலும் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுமாலைஅவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது மஹதிவுல்வெவ - 01ஆம் கண்டத்தில் வசித்து வரும் டபிள்யூ.எம். வசந்த திசாநாயக்க (35வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மரணம் தொடர்பிலான விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மறைந்த வண. இராஜப்பு ஜோசப்புக்கு மட்டக்களப்பில் நாளை அஞ்சலி நிகழ்வு

தமிழ்த் தேசியத்தின்பால் ஓங்கி ஒலித்த குரல், ஓய்வுநிலை ஆயர் அமரர் வண இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களின் இறுதி நல்லடக்க நாளான நாளை திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு மட்டக்களப்பு நகரில் உள்ள தந்தைசெல்வா சிலை வளாகத்தில் அஞ்சலி நினைவு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி சிரேஷ்ட தலைவருமான பொ.செல்வராசா தலைமையில் இடம்பெறும் இந்த அஞ்சலி நிகழ்வில, மறைந்த மன்னார் முன்னாள் மறைமாவட்ட ஆயர் அருட்திரு. இராஜப்பு ஜோசப் அடிகளாரின் படத்துக்கு மலர்மாலை அணிவித்து நினைவுச் சுடர்கள் ஏற்றி மௌனப்பிரார்த்தனைசெய்வதுடன் அன்னாரின் நினைவு தொடர்பாக ‘நினைவுரையும்’ இடம்பெறும். ஆன்மீகத் தலைவராக இருந்து தமிழ்த் தேசியத்தின்பால் அக்கறையுடன் செயலாற்றி வடக்கு கிழக்கு மக்கள் பல நெருக்கடிகளையும், கொலை அச்சுறுத்தல்களையும், தடைகளையும் சந்தித்த வேளைகளில் எல்லாம் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் துணிந்து குரல் கொடுத்த உன்னத மகான் ஆண்டகை இராஜப்பு ஜோசப் அடிகளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் இடம்பெறும் இந்த அஞ்சலி வணக்க நிகழ்வு கொரோனா நோய் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு முகக்கவசம், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி விரும்பியவர்களைக் கலந்துகொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

வேலையாட்கள் தேவை
சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.
- ரொட்டி, கிழங்கு ரொட்டி, சமோசா, றோல்ஸ் தயாரிப்பவர்.
- இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
- சமையல் உதவியாளர்கள்.
- சுத்திகரிப்பு செய்பவர்கள்.

* ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
* வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.
077 652 9583



சொர்க்கம் திருமண சேவை

மணமகன் விபரம்

பிறந்த திகதி -1982.09.09 மதம் - இந்து
ஜாதி - வேளாளர்
நட்சத்திரம் - கார்த்திகை 2ஆம் பாதம்
தகைமை - B.Com
தொழில் - Practice Manager அவுஸ்திரேலியா
எதிர்பார்ப்பு - இலங்கையில் ஓரளவு படித்த பெண்.

பிறந்த திகதி - 1982.06.05 மதம் - இந்து
ஜாதி - வேளாளர்
நட்சத்திரம் - அனுஷம்
தகைமை - B.B.A
தொழில் - கணக்காளர்
எதிர்பார்ப்பு - உத்தியோகப் பெண்.

பிறந்த திகதி - 1970.10.28 மதம் - Rc
ஜாதி - வேளாளர் (விவாகரத்து)
தகைமை - support Counselor
தொழில் - கனடா
எதிர்பார்ப்பு -இலங்கைப் பெண்.

பிறந்த திகதி - 1988.10.10 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ் - 8 இல்
நட்சத்திரம் - அஸ்தம்
தகைமை - BA தொழில் - GS
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்.

மணமகள் விபரம்

பிறந்த திகதி - 1987.11.13 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ் - 8 இல்
நட்சத்திரம் - ஆயிலியம்
தொழில் - கனடா
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த மணமகன்.

பிறந்த திகதி - 1990.10.04 மதம் - இந்து
ஜாதி - கோவியர் செவ் - 7 இல்
நட்சத்திரம் - உத்திரட்டாதி
தகைமை - Education Administration
தொழில் - Holland Citizen
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த மணமகன்

பிறந்த திகதி - 1992.08.04 மதம் - இந்து
ஜாதி - வேளாளர்
நட்சத்திரம் - சித்திரை 2 ஆம் பாதம்
தகைமை - B.A
எதிர்பார்ப்பு - உத்தியோக மணமகன்.

பிறந்த திகதி - 1993.01.01 மதம் - Rc
ஜாதி - வேளாளர்
நட்சத்திரம் -ரேவதி
தகைமை - HND, IT
தொழில் - BA QA. Software
எதிர்பார்ப்பு - அரச மற்றும் தனியார் துறை மணமகன்.

102/A பருத்தித்துறை வீதி,யாழ்ப்பாணம்.
www.sorkham.com
தொடர்புக்கு - 0014166661855, 077 650 5097, 076 236 4188, 021 222 1515

## வாகரை மக்கள் மீளெழுச்சி

வாகரை பிரதேச மக்கள் ஆரம்ப கால கஷ்டங்களில் இருந்து மீண்டு உழைக்க ஆரம்பித்துள்ளார்கள் அதற்கு அரசாங்கமும் எல்லா திணைக்களங்களும் தங்களாலான உதவிகளை செய்கின்றது என்று மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சந்தரகாந்தன் தெரிவித்தார்.

வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பிப்பிஞ்சா செய்கை விவசாயிகள் சந்திப்பும், உதவி வழங்கும் நிகழ்வும் நேற்று மாங்கேணி யில் இடம்பெற்ற போது இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலத்தில் இப்பிரதேசத்தில் செய்யப்படும் உற்பத்தி பொருள்களை விற்பனை செய்வதில் பாரிய சிக்கல்களை உற்பத்தியாளர்கள் எதிர் நோக்கி வந்தனர் தற்போது பிப்பிஞ்சாவுக்கு உலகளாவிய ரீதியில் அது வர்த்தகப் பொருளாக மாறியுள்ளது அதற்கு தகுந்த மண் வாகரையில் கிடைத்து இருப்பதன் காரணமாக பெருமளவு பொருளாதாரத்தை பெற்றுத்தரக்கூடிய பொருளாக பிப்பிஞ்சா மாறியுள்ளது.

எதிர்காலத்தில் இதே போன்று தானிய உற்பத்திகளை இப்பகுதியில் மேற்கொள்வதற்கு எங்களால் ஆன உதவிகள் மேற்கொள்ளப்படும் இந்த மண்ணை நம்பி வாழுகின்ற மக்களை அறிவூட்டி தெளிவூட்டி அவர்களுடைய உழைப்புக்கேற்ற ஊதியத்தை பெற்றுக்கொடுத்து இந்த மண்ணிலே அவர்களை வாழ வைப்பதுதான் என்னுடையதும் இந்த அரசாங்கத்தினுடைய எதிர்பார்ப்பாகும் அதனை நாங்கள் எல்லோரும் சேர்ந்து செய்வோம்.

இங்கு விவசாயத்தில் ஈடுபடும் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் சேர்ந்து தீர்த்து வைப்போம் இப்பகுதி மக்கள் உழைத்து சேமிக்கின்ற மக்களாக மாற வேண்டும் அதை நாங்கள் கண் கூடாக பார்த்து மகிழ்வதுதான் எங்களது மகிழ்ச்சி என்றும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# பந்துவீச்சாளரைத் தேடுகிறது சென்னை சூப்பர் கிங்ஸ்!

ஐ.பி.எல். 14 ஆவது சீசனில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தனது முதல் லீக் போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியை மும்பை வான்கடே மைதானத்தில் எதிர்கொள்ளவுள்ளது.

இதற்காக வீரர்கள் தீவிரப் பயிற்சியில் ஈடுபட்டு வரும் நிலையில் ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பந்துவீச்சாளர் ஜோஸ் ஹசில்வுட், இந்த சீசனில் பங்கேற்கப்போவதில்லை என அறிவித்து அணி நிர்வாகத்திற்கு அதிர்ச்சி கொடுத்தார்.

இதனையடுத்து, மாற்று பந்துவீச்சாளரை தேர்வு செய்யும் பணியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. முதற்கட்டமாக, ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த பில்லி ஸ்டன்லேக், இங்கிலாந்தைச் சேர்ந்த ரீஸ் டாப்லி இருவருக்கும் சென்னை சூப்பர் அணி நிர்வாகம் தூதுவிட்டது. இதனை இருவரும் ஏற்கவில்லை. இந்தியாவில் கொரோனா அதிகரித்து வருவதுதான் இதற்கு முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது.

இதுகுறித்து டைம்ஸ் ஆஃப் இந்தியாவுக்கு பேட்டிகொடுத்த சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகி ஒருவர், பல முன்னணி பந்துவீச்சாளர்கள் கவுண்டி கிரிக்கெட்டில் விளையாட ஒப்பந்தமாகியுள்ளனர். இதனால், மாற்று பந்துவீச்சாளரை தேர்வு செய்ய முடியவில்லை. மேலும், இந்தியாவில் கொரோனாப் பாதிப்பு அதிகரித்து காணப்படுவதால் வெளிநாட்டு வீரர்கள் இங்கு வர தயங்குகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

# டொரினோவுடன் சமநிலை 4 ஆம் இடத்தில் யுவன்டஸ்



டொரினோ அணிக்கு எதிரான ஆட்டத்தை யுவன்டஸ் அணி 2 - 2 என்ற கோல் கணக்கில் டிரா செய்ததன் மூலம் புள்ளிப் பட்டியலில் நான்காம் இடத்திற்கு தள்ளப்பட்டது.

இத்தாலி நாட்டில் நடைபெற்று வரும் ‘சிரி ஏ’ கால்பந்துத் தொடரின் போட்டியில் புள்ளிப் பட்டியலில் மூன்றாம் இடத்தில் இருந்த யுவன்டஸ் அணியும் 17 ஆவது இடத்தில் இருக்கும் டொரினோ அணியும் மோதின. இவ்விரண்டு அணிகள் மோதிய முதல் ஆட்டத்தை யுவன்டஸ் அணி 2 - 1 என்ற கோல் கணக்கில் வென்றிருந்தது.

நடப்புச் சம்பியனான யுவன்டஸ் அணி கடந்த ஆட்டத்தில் பெனவெண்ட்டோ அணிக்கு எதிராக தோல்வி அடைந்தது. அதிலிருந்து மீண்டு வெற்றிப் பாதைக்கு திரும்புவதற்கு டொரினோ அணிக்கு எதிரான இந்த ஆட்டம் மிக அருமையான வாய்ப்பாக அமைந்தது. வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்பில் யுவன்டஸ் அணி களம் இறங்கியது.

ஆட்டத்தை அட்டகாசமாக தொடங்கிய யுவன்டஸ் அணி முதல் நிமிடத்திலிருந்து வாய்ப்புகளை உருவாக்கி வந்தது. ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்தில் யுவன்டஸ் அணியின் முன்கள வீரரான மொராட்டா கோலை நோக்கி அடித்த பந்தை டொரினோ அணியின் கோல் கீப்பர் சல்வடோர் சிரிகு பாய்ந்து தடுத்தார்.

தொடர்ந்து தாக்குதல் நடத்திய யுவன்டஸ் அணியை டொரினோ அணி கவுண்டர் அட்டாக் செய்து வந்தது. ஆனால், இரு அணிகளுக்கும் கோல் கிடைக்கவில்லை. தொடர்ந்து தாக்குதல் நடத்தி வந்த யுவன்டஸ் அணியின் மொராட்டா கொடுத்த பந்தை கியேஸ்ஸா நகர்த்திச் சென்று கோல் அடித்து யுவன்டஸ் அணியை ஒரு கோல் முன்னிலை பெறச் செய்தார். யுவன்டஸ் அணி ஆட்டத்தை ஆதிக்கம் செய்தாலும் டொரினோ அணியினரும் யுவன்டஸ் அணியின் தடுப்பு ஆட்டக்காரர்களுக்கு தலைவலியாக அமைந்தனர்.

டொரினோ அவ்வப்போது நடத்தி வந்த தாக்குதல்களுக்கு பலனாக ஆட்டத்தின் 27ஆவது நிமிடத்தில் அணியின் சனாப்ரியா தலையால் முட்டி கோல் அடித்து ஆட்டத்தை சமன் செய்தார். ஆட்டம் சமன் செய்யப்பட்ட நிமிடத்தில் இருந்து யுவன்டஸ் அணி கடுமையான தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டது. டொரினோ அணியின் தடுப்பு ஆட்டக்காரர்கள் யுவன்டஸ் அணியின் தாக்குதல்களை சிறப்பாக செயல் இழக்கச் செய்தனர். முதல் பாதி 1 - 1 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது.


இரண்டாம் பாதியை தொடங்கிய டொரினோ அணியின் சனாப்ரியா யுவன்டஸ் அணியின் குலுசெவ்ஸ்க்கி கொடுத்த பாசை இடைமறித்து பந்தை கடத்திச் சென்று கோல் அடித்து டொரினோ அணியை 2 - 1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெறச் செய்தார். இரண்டாம் பாதியின் ஆரம்பத்திலேயே பின்னடைவைச் சந்தித்த யுவன்டஸ் அணியினர் கடுமையான தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டு தொடர்ந்து வாய்ப்புகளை ஏற்படுத்தி வந்தனர்.

தொடர்ந்து கடுமையான தாக்குதல் நடத்தி வந்த யுவன்டஸ் அணியின் ரொனால்டோ ஆட்டத்தின் 79 ஆவது நிமிடத்தில் கோல் அடித்து ஆட்டத்தை சமன் செய்தார். ஆனால் ஆஃப் சைட் என்று தெரிவித்து அந்த கோல் நிராகரிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து மறுபரிசீலனை செய்யப்பட்டு அந்த கோல் மீண்டும் வழங்கப்பட்டது. இதனால் ஆட்டம் 2 - 2 என்ற கோல் கணக்கில் சமன் செய்யப்பட்டது. தொடர்ந்து தாக்குதல் நடத்தி வந்த யுவன்டஸ் அணிக்கு இறுதிவரை மேலும் கோல் அடிக்கும் வாய்ப்புக் கிடைக்காத காரணத்தால் ஆட்டம் 2 - 2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

மற்றொரு ஆட்டத்தில் அடலன்ட்டா அணி வெற்றி பெற்றதன் காரணமாக யுவன்டஸ் அணி புள்ளிப் பட்டியலில் நான்காம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

# ஐ.பி.எல். 2021 பெங்களூர் அணி வீரர் தேவ்தத் படிக்கலுக்கும் கொரோனா

14 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் வரும் 9 ஆம் திகதி தொடங்குகிறது. சென்னையில் நடக்கும் முதல் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியும் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதுகின்றன.



போட்டி நடைபெற இன்னும் சில நாள்களே எஞ்சியுள்ள நிலையில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் ஆரம்ப ஆட்டக்காரர் தேவ்தத் படிக்கலுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து உடனடியாக தேவ்தத் படிக்கல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். ஏற்கனவே, டெல்லி கபிப்டல்ஸ் அணி வீரர் அக்சர்படேல் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் வீரர் நிதிஷ் ராணா ஆகியோர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குறைந்த இன்னிங்ஸ்களில் 13 சதங்கள் பாபர் அசாம் புதிய சாதனை



பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகள் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது.

தென்னாபிரிக்க அணிக்கெதிராக நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அசாம் 103 ரன்கள் விளாசி அணிக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார்.

பாபர் அசாமுக்கு இது 78 ஆவது ஒருநாள் இன்னிங்ஸாகும். இதில் சதம் விளாசியதன் மூலம் மொத்தம் 13 சதங்கள் எடுத்து, ஒருநாள் கிரிக்கெட்டில் குறைந்த போட்டிகளில் 13 சதங்கள் அடித்த வீரராகவும் அவர் மாறியுள்ளார். இதற்குமுன் தென்னாபிரிக்க வீரர் ஹாஷிம் அம்லா 83 இன்னிங்ஸ்களில் 13 சதங்களை அடித்திருந்தார். அதேபோல், இந்திய அணித் தலைவர் விராட் கோலி 86 இன்னிங்ஸ்களில் இந்த எண்ணிக்கையை அடைந்திருந்தார். இரண்டையும் தற்போது பாபர் அசாம் தகர்த்துள்ளார்.

இந்திய அணித் தலைவர் விராட் கோலி, கடந்த 2019ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒரு சதம் கூட எடுக்கவில்லை. பலமுறை அரைச் சதங்கள் கடந்தும் அதைச் சதமாக மாற்ற முடியாமல் தடுமாறி வருகிறார். இருப்பினும் ஐ.சி.சி. தரவரிசையில் 857 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் நீடிக்கிறார். பாபர் 837 புள்ளிகள் பெற்று அடுத்த இடத்தில்தான் உள்ளார்.

ஆஸ்திரேலிய மகளிர் அணியின் தலைவர் மெக் லன்னிங் 76 இன்னிங்ஸ்களில் களமிறங்கி 13 சதங்களை விளாசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தலை அரசு எதிர்த்தால் அதற்கு எதிராக நான் நிச்சயம் போராடுவேன்

## டக்ளஸ் திடசங்கற்பம்



மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் எதிர்த்தால் அரசாங்கத்துக்கு எதிராக நான் போராடுவேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியில் கிராம மட்ட அமைப்புகள் பொது அமைப்புகளுடன் சந்திப்பொன்றை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் மேற்கொண்டிருந்தார்.

இதன் பின்னர் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டா. ஊடகங்கள் செய்தியைத் திரிவுபடுத்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட றோலர் படகுகளை எமது கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் பாவிப்பார்களாக இருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று இந்திய மீனவர்கள் நாட்டுப் படகு மூலம் மீன்பிடிப்பில் ஈடுபடுவார்களாக இருந்தால் எமது நாட்டு எல்லைக்குள் வரும்போது பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே உட்பிரவேசிக்க முடியுமெனத் தெரிவித்தார் .

எனினும் இந்த முடிவுகள் தொடர்பாக இருதரப்பு மீனவர்களுடனான சந்திப்பின் பின்னர் முடிவுகள் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# திருநெல்வேலி பாற்பண்ணைக் கிராமத்துக்கு சுமந்திரன் எம்.பியின் ஏற்பாட்டில் உலருணவு





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் ஏற்பாட்டில் திருநெல்வேலி பால் பண்ணையில் தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கும் தொழில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உலர் உணவுப் பொதிகள் நேற்று சனிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

இந்த உலர் உணவுப் பொதிகளை வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன், நல்லூர் பிரதேசசபை முன்னாள் தவிசாளர் தியாகமூர்த்தி, தமிழரசுக் கட்சியின் நல்லூர் இளைஞர் அணித் தலைவர் விநோதன், நல்லூர் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் சுரேஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு உலர் உணவுப்பொதிகளை வழங்கி வைத்தனர்.

# ஹெரோயின் போதைப்பொருளுடன் வவுனியாவில் இளைஞன் கைது

வவுனியா, பழைய பஸ் நிலையத்தில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞன் ஒருவரை வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று சனிக்கிழமை மாலை கைது செய்தனர்.

வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி அழகிய வண்ண தலைமையில் சார்ஜன்ட் விக்கிரமசூரிய, சமீர, நிமல உள்ளிட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் விசேட நடவடிக்கையில் ஈடுபட்ட போது சந்தேகத்துக்கு இடமான முறையில் பழைய பஸ் நிலையத்தில் நடமாடிய இளைஞன் ஒருவரை சோதனை செய்தனர்.

இதன்போது குறித்த இளைஞனிடம் இருந்து 60 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது. இதனையடுத்து அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த இளைஞன் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# மக்களைத் தூண்டிவிடும் அரச சார்பற்ற நிறுவனங்கள்

## பஸில் குற்றச்சாட்டு



அரசாங்கம் நீர் நிலைகளை அமைத்து அதற்கு அருகில் உள்ள காணிகளில் மக்களின் நன்மைக்காக அபிவிருத்திகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ள நிலையில் சூழலியலாளர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் பணம் கொடுத்து மக்களை திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக அமைச்சர் சமல் ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

'மஹிந்த சிந்தனையின் பிரகாரம் ரம்புகன் ஓயா நீர்த்தேக்கத்தை நாம் உருவாக்கினோம். தற்போது அங்கு காணி உள்ளது. அதனை அபிவிருத்தி செய்ய வேண்டும். அதனை சூழலியலாளர்கள் எதிர்க்கின்றனர். இவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் கைக்கூலிகள். நாம் இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாகவும் அவர்களுக்கு பணம் வரும் விதம் குறித்தும் அவர்களின் நோக்கம் குறித்தும் தேடி வருகிறோம். பல தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. பணம் கொடுத்து மக்களை உசுப்பேற்றி விடுகின்றனர். குளம் அமைத்து அதற்கு அருகில் உள்ள காணியை அபிவிருத்தி செய்யாவிட்டால் அதன்மூலம் மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை என தெதுருஓயா பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

# அரசாங்கத்துக்கு எதிராக ஐ.நாவில் முறைப்பாடளிக்க உள்ளார் ரணில்!

## உலக மரபுரிமையான சிங்கராஜவன அழிவுக்காக



அரசாங்கத்தின் வன அழிப்பிற்கு எதிராக கண்டனத்தை தெரிவிக்கும் வகையிலும் சிங்கராஜ வனம் உள்ளிட்ட தேசிய வன வளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் தமிழ் - சிங்கள புத்தாண்டில் பச்சை நிற ஆடை யணிய வேண்டும் என கேட்டுக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, உலக மரபுரிமையான சிங்கராஜ வனத்துக்கு தற்போது ஏற்பட்டுள்ள அழிவு தொடர்பாக செவ்வாய்க் கிழமை கொழும்பு ஐ.நா. அலுவலகத்தில் முறைப்பாடளிப்பதோடு நீதிமன்ற ஊடக நடவடிக்கை எடுக்கப்போகிறார் எனவும் தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில் -

சிங்கராஜ வன அழிப்பிற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்துள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவிற்கு முன்பாக அரசாங்கத்தின் வன அழிப்பிற்கு எதிராக ஓவியக் கண்காட்சியும் கண்டன ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்படும்.

1988 ஆம் ஆண்டில் சட்டப்பூர்வமாக தேசிய மரபுரிமையாக சிங்கராஜ வனம் அங்கீகரிக்கப்பட்டது.

அவ்வாறானதொரு சிறப்புரிமை மிக்க இந்த வனத்தை அழிப்பதற்கு இடமளிக்கக் கூடாது. அது மாத்திரமன்றி யுனெஸ்கோவும் உலக மரபுரிமையாக அங்கீகரித்துள்ளது. எனவே அதனைப் பாதுகாப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை ஏனைய தரப்புகளையும் ஒன்றிணைத்து முன்னெடுக்க வேண்டும்.

ஐ.நா. உட்பட தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு சிங்கராஜ வன அழிப்பு தொடர்பாக அறிவிப்போம். ஜனாதிபதி , பிரதமர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கும் உத்தியோகபூர்வமாக அறிவிப்போம். புத்தாண்டு தினத்தில் வன பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பச்சை நிற ஆடைகளை அணிந்து முன்மாதிரியாக செயற்பட அனைவருக்கும் அறிவிப்போம்.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகத்திற்கு செவ்வாய்க்கிழமை சென்று அனைத்து ஆதாரங்களையும் முன்வைத்து முறைப்பாடு செய்வோம். மறுபுறம் நீதிமன்றத்தின் ஊடாக தற்போது சிங்கராஜ வனத்திற்குள் இடம்பெறுகின்றன எனக் கூறப்படுகின்ற திட்டங்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

# உடலில் விஷம் ஏறியதால் தாய், மகன் உயிரிழப்பு!

## பொலன்னறுவையில் சம்பவம்

பொலன்னறுவை - பிஹிடிவெள, நுவரகல பிரதேசத்தில் தாய் மற்றும் மகன் ஆகியோரின் உடலில் விஷமேறி உயிரிழந்துள்ள சம்பவமொன்று நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

இதன்போது 6 வயதுடைய மகனும், 28 வயதுடைய தாயுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த தாயின் மூன்று வயது மகனின் உடலிலும் விஷேமறியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தற்கொலையா? அல்லது கொலையா? என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜெனிவாவில் ஆதரவு வழங்கியமைக்காக ரஷ்யா, சீனாவுக்கு இலங்கை நன்றி பாராட்டு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்து, தமது ஆதரவை வெளிப்படுத்திய ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இலங்கை நன்றி தெரிவித்துள்ளது.

இலங்கையின் வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்தன அண்மையில் இலங்கைக்கான ரஷ்ய தூதர் யூரி மெட்டேரி மற்றும் இலங்கைக்கான சீனத் தூதர் குய் ஜென்ஹோங் ஆகியோரை சந்தித்து பேசியிருந்தார்.

இந்த சந்திப்பு கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கொவிட் - 19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்த விரிவாக்கப்பட்ட உதவிகளுக்கு இலங்கை அரசு சார்பாக வெளியுறவு அமைச்சர் ரஷ்யா மற்றும் சீன அரசுகளுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

அத்துடன், ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவளித்தமை தொடர்பாக அமைச்சர் தனது நன்றிகளை தெரிவித்திருந்தார்.

இலங்கையின் நட்பு உறவுகள் மற்றும் சீனா மற்றும் ரஷ்யாவுடனான இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பாக அமைச்சர் இரு நாடுகளின் தூதர்களை தனித்தனியாக சந்தித்து விரிவாகக் கலந்துரையாடினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org